

விருதுநகர் தெற்கு மாவட்டம் அப்பாயநாயக்கன்பட்டி கிராமத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் பொதுமக்களுக்கு பட்டா மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, ஒன்றிய தி.மு.க. செயலாளர் கனி முருகன், ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் சுவர் இடிந்து விழுந்து நர்சிங் மாணவி இறந்த நிலையில், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று மாணவியின் குடும்பத்திற்கு ரூ.6 லட்சம் நிதி வழங்கினார். உடன் சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், மாநகர செயலாளர் உதயசூரியன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் விவேகன்ராஜ், வர்த்தக அணி வனராஜ் ஆகியோர் இருந்தனர்.

# நாகை மாவட்டத்தில் நீரில் மூழ்கிய நெற்பயிர்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, அக். 28 - நாகை மாவட்டத்தில் சாகுபடி செய்த விளைநிலங்களில் வடகிழக்கு பருவமழையினால் நீரில் மூழ்கிய நெற்பயிர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் வட்டம், கருவேலங்கடை கிராமம், கீழ்வேளூர் வட்டம், சின்னதும்பூர் கிராமம், திருக்குவளை வட்டம், திருவாய்மூர் ஆகிய கிராமங்களில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்த கனமழையினால் குறுவை சாகுபடி செய்த விளைநிலங்களில் நீரில் மூழ்கிய நெற்பயிர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத்துறை இயக்குநர் பா.முருகேஷ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகமேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என். இளையராஜா,

மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் .நாகை மாலி.தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர் . அ.சிவப்பிரியா, நாகை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ். கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி..மனோகரன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சிக்கல் என். ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அ.பாரி பாலன், கா.சத்தியமூர்த்தி, பெ.முருகானந்தம், எஸ் பால்ராஜ் பாலமுரளி, . சுந்தர், ஒன்றிய துணை செயலாளர் திருநாவுக்கரசு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

ஆய்வின் போது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா சாகுபடி செய்த விவரம் குறித்தும் அவற்றில் அறுவடை முடிவற்ற விவரம் குறித்தும் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தின் போது கேட்டறிந்தார். மேலும், வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கனமழையால் நாகை, திருவாரூர், தஞ்சை, மயிலாடுதுறை மாவட்டம் ஆகிய பகுதிகளில் விளைச்சல் நீரில் மூழ்கியிருக்கின்ற செய்தி அறிந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களையும், வேளாண்மை துறை அதிகாரிகளையும் நேரடியாக பகுதிகளுக்கு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு கூட்டத்தை நடத்தி நெல் விளைகின்ற அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல்லினை பாதுகாக்க வேண்டும் எனவும், அதனை உடனடியாக நெல் அரவை ஆலைக்கும், வெளிமாவட்டங்களுக்கும் அனுப்ப வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மூன்று முறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு கூட்டத்தை நடத்தி உள்ளார். அதன் அடிப்படையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரடி நெல் கொள்முதல் நிலை யங்களில் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பருவமழை தீவிரமடைந்து வருவதால், வானிலை சார்ந்த பயிர் ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகள் அனைத்து சமூக, பொது ஊடகங்கள் வாயிலாக முன்கூட்டியே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், பயிர் சேதங்களை கண்காணித்திட மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு நீரில் மூழ்கிய பயிர்களில் சேதம் ஏற்படும் பட்சத்தில், வேளாண்மை மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் இணைந்து பயிர் சேதப் பரப்பினை கூட்டுக்கணக்கெடுப்பு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சியர் வாயிலாக கருத்துரு அனுப்பிட உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பயிர்க் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் பெருமளவில் பதிவு செய்திட களப்பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, நாகை மாவட்டத்தை பொருத்தவரை சுமார் 30,218 ஹெக்டர் பரப்பளவில் குறுவை, சுமார் 22,422 ஹெக்டர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்பட்டு, அதில் சுமார் 15,484 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யப்பட்டுள்ளது. மேலும், சுமார் 14,733 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யாமலிருந்த நிலையில் தற்போது இரு தினங்களுக்கு முன்பு பெய்த கன மழையால் குறுவை சாகுபடி செய்து அறுவடை செய்ய வேண்டிய சுமார் 14,733 ஹெக்டர் பரப்பளவு நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது, சம்பா சாகுபடி செய்து வளர்ச்சி பருவத்தில் உள்ள சுமார் 22,422 ஹெக்டர் பரப்பளவு பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது, அதனை பார்வையிட்டு அதற்கான அறிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### பி.ஜே.பி. அரசு வாக்காளர் பட்டியலில் குளறுபடி செய்ய முயற்சி!

# புதுச்சேரி - காரைக்கால் மாநில வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் ஆலோசனை வழங்கினார்!

காரைக்கால், அக்.28- வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை கைப்பற்ற வேண்டும் என்ற கனவுடன் பி.ஜே.பி. அரசு வாக்காளர்கள் பட்டியல் திருத்தம் என்ற பெயரில் எதிர்க்கட்சியினர் வாக்குகளை சிதறடிக்கும் செயலில் ஈடுபட்டு வருவதாக காரைக்கால் மாவட்ட தி.மு.க. அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் கூறினார். எனவே தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் கவனத்துடன் வாக்காளர்கள் பட்டியலை சரிபார்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ். ஆர். நகரில் மாவட்ட திமுக சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

நிரவி திருப்பட்டினம் திமுக சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும், திமுக சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம். எச்.நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வாக்குகளை சிதறடிக்கும் வகையில் சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியல் என்ற பெயரில் ஒன்றிய அரசு வாக்காளர்கள் பெயர்களை நீக்கம் செய்து வருவது பிற மாநிலங்களே சாட்சி என கூறினார்.

ஆகையால் தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் ஒன்றிய அரசின் இத்தகைய சூழ்ச்சியை முறியடிக்கும் வகையில் வாக்காளர்கள் பட்டியலை மிகவும் கவனத்துடன் சரிபார்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. துணை அமைப்பாளர் காசிநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஐ.முஹம்மது ரிஃபாஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அமுதா ஆறுமுகம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ்.ஆர். நகரில் மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நிரவி திருப்பட்டினம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட தி.மு.க. அமைப்பாளரும், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முன்னீர் பள்ளத்தில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! ம.கிரகாம்பெல் அறிவிப்பு!



நெல்லை.அக்.28- நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் நெல்லைக்கு இன்று (28ம் தேதி) வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு இரவு 830 மணி அளவில் முன்னீர் பள்ளத்தில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தென்காசியில் 29 ம் தேதி நடைபெறும் அரசு நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நெல்லையில் இன்று (28 ம் தேதி)நெல்லை கிழக்கு மாவட்டம் சார்பில் எல்லையான முன்னீர் பள்ளத்தில் இரவு 830 மணி அளவில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும்,வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி பயிற்சி கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றியும்,பாக முகவர்கள் குறிப்பேடு பணிகள் குறித்தும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இவ்வாறு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ், மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, எரிக்ஜூடு,சேவியர் செல்வ ராஜா, அலெக்ஸ் அப்பாவு, போர்வல் கணேசன், சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, பி.சி.ராஜன், வேலங்குளம் கண்ணன், சுபாஷ் தங்கபாண்டி, நகர செயலாளர் மணிசூரியன்,பேரூர் செயலாளர்கள் ஜான் கென்னடி,அயூப் கான், கசமுத்து,சேதுராமலிங்கம், தமிழ்வாணன்,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மல்லிகா அருள்,மாடசாமி,முருகன், எஸ்.என். முருகன், கேசவன்,ஜோசப் சந்திரன்,பணகுடி ராமலிங்கசுவாமி அறங்காவலர்குழு தலைவர் அசோக்குமார்,ஆதி பாண்டி, இசக்கிபாண்டி, வேல்த்துரை, சரவணன், ஆதிபரமேஸ்வரன், ஜார்ஜ், ஆனந்த், சுரேஷ், சுரேஷ் பாக்கியம்,ஐ.ஆர்.ரமேஷ், தனபால்,மாடசாமி,சந்திரன், நடேஷ், இலங்காமணி, ராஜா,தனபால், கண்ணன், பொன் இசக்கி, மந்திரம், லட்சுமணன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்படபலர்கலந்துகொண்டனர்.

# கள்ளக்குறிச்சி - விருகாவூரில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. – கழகத்தினர் பங்கேற்பு!

தியாகதுருகம் அக்.28- கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஒன்றியம், விருகாவூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் 25.10.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்றது, இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், ஒன்றியக்குழு துணை தலைவர் நெடுஞ்செழியன், அட்மா திட்ட குழு தலைவர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாவட்ட சுகாதார அலுவலர் ராஜா வரவேற்றார்.

முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் ககார்த்திகேயன் கலந்துகொண்டு பேசியதாவது:-

நலம் காக்கும் மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தினார். இந்த சிறப்பு திட்டமானது நகரம் முதல் குக்கிராமத்தில் வரை உள்ள மக்களிடம் சென்றடைந்துள்ளது, பொதுவாக திருமணம் மஞ்சள் நீர், காதணி விழா, புதுமனை புகுவிழா உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் மற்றும் பொதுவான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து வருவது வழக்கம், இந்த முகாமை பொறுத்தவரை நலிவுற்று வருவோர் நலம் பெற்று செல்க என முன்னாள் தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியது போல் அனைவரும் நலம் பெற வேண்டும் என பேசினார், தொடர்ந்து மருத்துவ முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேலும் முகாமில் பொது மருத்துவம், இருதய நோய், கண் மருத்துவம் எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், நுரையீரல் மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான மருத்துவம் மற்றும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட 23 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

முகாமில் சுமார் 700 க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதில் சுகாதாரத்துறை இணை இயக்குனர் மாலுனி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கொளஞ்சி வேலு, வட்டார மருத்துவ அலுவலர் ஸ்ரீராம், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட அமைப்பாளர் ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் வெ.பழனிச்சாமி, போ. சாமிதுரை தியாகதுருகம் தெற்கு ஒன்றிய கழக அவை தலைவர் போ.சாமிதுரை ஊராட்சி மன்ற தலைவர்கள் இளங்கோவன், கலியன், சுகன்யா நாராயணசாமி மற்றும் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள், மருத்துவ குழுவினர், கழக நிர்வாகிகள் பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

முடிவில் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரலேகா அருள் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.டி. தண்டபாணி

### அக்டோபர் 28 (2001)



**கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**